
# திராவிடத்தால் வாழ்கிறோம்

997

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

34

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**




இந்தியக் குடியரசின் குடிமக்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 25 (1) இன் படி மதச் சுதந்திரத்தை அனுபவிக்கவும் கடைப்பிடிக்கவும், பரப்பவும் சம உரிமை உண்டு. ஆனால், சிறுபான்மையினருக்கு அந்த உரிமையைத் துணிச்சலாக மறுத்துக் கொண்டிருக்கிறது, ஆரிய அரசியல். அரசியலமைப்பை தூக்கித் தூர வைத்துவிட்டு, பெரும்பான்மைவாதத்தை முன்னிறுத்தி, விஷ வேர் பரவும் இந்தியாவை வளர்த்துக்கொண்டிருக்கிறது சங் பரிவாரங்கள்.

வட மாநிலங்களில் குக்கிராமம் வரை வேர் விட்டுப் படர்ந்திருக்கிற இந்த பெரும்பான்மைவாதம் தமிழ்நாட்டில் கிளைக்காமல் முறியடித்தவர், நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே. ஆர்.எஸ்.எஸ். இயக்கம் உருவாகி ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டபோதிலும், இந்தப் பெரும்பான்மைவாத சிந்தனைக்குப் பெரும் அடித்தளமிட்டது, பாபர் மசூதி இடிப்புதான். 1992-இல் பாபர் மசூதி இடிப்புச் சம்பவம் நடைபெற்ற பிறகுதான், பல வட மாநிலங்களில் மதத்தின் பெயரால் இந்துக்களை அணிதிரட்டுவதில் ஆரியம் பெரு வெற்றி கண்டது. அதன்பிறகு, குஜராத்தில் 2002-ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரம் இந்து - முஸ்லிம் ஒற்றுமையைச் சீர்குலைத்து, ஒடுக்குமுறைகளைத் துணிச்சலோடு ஏவுவதற்கு மனரீதியான பலத்தை அவர்களுக்குத் தந்தது.

இந்தக் கலவரத்திற்கு அடுத்த ஆண்டே, குஜராத்தில் கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார், அப்போதைய அம்மாநில முதல்வர் நரேந்திர மோடி. ஆனால், குஜராத்தில் இப்படியொரு சட்டம் வருவதற்கு முன்பே, தமிழ்நாட்டில் 2002-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ஆம் தேதி, கட்டாய மதமாற்ற தடைச் சட்ட மசோதாவை அறிமுகம் செய்தவர், நரேந்திர மோடியின் உற்ற நண்பரான அம்மையார் ஜெயலலிதா.

## சிறைத் தண்டனை

‘ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு கட்டாயப்படுத்தி, ஆசை வார்த்தைகள் கூறி, பண ஆசை காட்டி மதம் மாற்றுவது குற்றச் செயல். இதுபோன்ற செயலில் ஈடுபட்டுக் கைதாகும் நபர்களுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். 18 வயதுக்குக் கீழ் உள்ளோர், பெண்கள் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களை மதம் மாற்றினால், மதம் மாற்றியவர்களுக்கு 4 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். அபராதம் ஒரு லட்ச ரூபாய் விதிக்கப்படும்’ என்ற அம்சங்கள் இந்த மசோதாவில் இடம் பெற்றிருந்தன.

குறிப்பாக, இந்த அவசரச் சட்டத்தின் பிரிவு 5 (1). சுயமாக மதம் மாறியவர் அல்லது ஒரு மதப் பாதிரியாராக மதமாற்ற விழாவில் பங்கேற்றவர் அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ அத்தகைய விழாவில் பங்கேற்றவர், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உள்ளூர் நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், ஒரு வருடம் சிறைத்தண்டனை மற்றும் ரூ.1,000 அபராதம் விதிக்கப்படலாம்.

## ஓரணியில் திரண்ட எதிர்க்கட்சிகள்

எந்தவொரு மதத்தில் நீடிப்பதும் மாறுவதும் அல்லது மத நம்பிக்கையவற்றவர்களாக வாழ்வதும் தனி மனிதரின் விருப்பு - சுதந்திரத்திற்கு உட்பட்டது. அதில் தலையிடுவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. அதுமட்டுமல்ல இந்து மதத்தைப் பொறுத்தவரையில், மதமாக மட்டும் மக்களை இணைக்கவில்லை; மதத்தைவிட சாதி என்ற பலமான கட்டமைப்பு அதற்குள் இருக்கிறது. அது, பிறப்பின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவர் பிறக்கும்போதே, அவர் பெற்றோர் எந்த சாதியோ அந்த சாதியில் இணைக்கப்பட்டு விடுவார். அவரே விரும்பினாலும் சாதியை மாற்ற முடியாது. அதனால், வேறு ஒரு மதத்தில் இருந்து இந்து மதத்தை யாரேனும் விரும்பி ஏற்க நினைத்தாலும், அவரை எந்தச் சாதியும் தங்கள் சாதியில் இணைத்துக் கொள்ளாது. சாதியற்றவர்களை இந்துவாக ஆரிய இந்து மதம் ஏற்றுக் கொள்ளாது.

ஆனால், மற்ற மதங்களில் இத்தகைய தடை இல்லை. மற்ற மதங்களின் கடவுள்மீது எவருக்கேனும் நம்பிக்கை உண்டாகுமானால், எந்தத் தடையும் இல்லாமல் அம்மதத்தைத் தழுவலாம். எனவே, இதைத் தடுக்க வேண்டும் என்ற முயற்சியாகத்தான், செயற்கையாக மத மாற்ற தடைச் சட்டம் ஒன்றை உருவாக்க ஆரியத்தின் சூழ்ச்சி வேலை செய்தது. தமிழ்நாட்டின் ஆரியப் பிரதிநிதியாக செயல்பட்ட ஜெயலலிதா அரசு, அதனை செயல்படுத்திக் காட்ட துணிந்தது. இந்தச் சூழ்ச்சிகளை வெகு இலகுவாக தமிழ்நாடு புரிந்துகொண்டது. தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், வி.சி.க., ம.தி.மு.க., பா.ம.க. என அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு, ஜெயலலிதாவின் மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்தன.

> “அவரவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மதம் மாறினால்கூட அவர்கள் கட்டாயமாக மதம் மாறியதாகக் கூறி தண்டிக்கப்பட நேரிடும்!”

அதில் முன்கள நாயகராக நின்றார், முத்தமிழறிஞர் கலைஞர். “பெரியாரின் கொள்கைப்படி, அண்ணாவின் கொள்கைப்படி, அந்தச் சட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல, அவரவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மதம் மாறினால்கூட அவர்கள் கட்டாயமாக மதம் மாறியதாகக் கூறி தண்டிக்கப்பட நேரிடும். எனவே, அந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது” என்று திட்டவட்டமாகக் கூறினார், கலைஞர். இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டத்தை எதிர்த்தனர். ஆனால், எல்லா எதிர்ப்புகளையும் உதாசீனப்படுத்தினார் ஜெயலலிதா.

## நான் சாகும்வரை நடக்காது!

அக்டோபர் 24-ஆம் தேதி, சென்னை ஆண்ட்ரூ சர்ச் வளாகத்தில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். மறுநாள் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலைஞர், பா.ம.க. தலைவர் ராமதாஸ், காங்கிரஸ் தலைவர் சோ.பாலகிருஷ்ணன், கம்யூனிஸ்ட் தலைவர்கள் வரதராஜன், நல்லகண்ணு, புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்பொதுக்கூட்டத்தில் பேசிய கலைஞர், “மதமாற்றத்தால் இந்துக்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதாகக் கூறுவதை ஏற்க முடியாது. இது தொடர்பான ஆதாரம் எங்கும் இல்லை. உண்மையில், 2.6 சதவீதமாக இருந்த கிறிஸ்தவர்களின் மக்கள்தொகை 1981-இல் 2.43 சதவீதமாக ஆகக் குறைந்தது. அடுத்த 10 ஆண்டுகளில், 2.34 சதவீதமாகக் குறைந்து, கடைசியாக 2001-இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது வெறும் 2.18 சதவீதமாகத்தான் உள்ளது.

இன்னும் ஏன் இரட்டை டம்ளர் முறை அமலில் உள்ளது? குவளையில் நீர் தர மறுக்கிறீர்கள். மூங்கில் குழாயில் நீரை ஊற்றித் தருகிறீர்கள். தாழ்த்தப்பட்டவர்களின் நிலை இதுவாக இருந்தால், அவன் மதம் மாறாமல் என்ன செய்வான்? தொழுநோயாளிகளும் இந்துக்கள் அல்லாதவர்களும் உள்ளே நுழையக் கூடாது என்று கோயில்களில் அறிவிப்புகள் ஏன் வைக்கப்பட்டுள்ளன? சுயமரியாதை உள்ளவன் இதைப் பார்த்துக் கொண்டிருப்பானா? அதனால், மதம் மாறுகிறான். மத மாற்றத்துக்குக் காரணமே மன மாற்றம்தான்.

காஞ்சி சங்கராச்சாரியாரின் உத்தரவுப்படி, மத்தியிலும் இதுபோன்ற சட்டம் கொண்டு வர முயற்சி நடக்கிறது. ஆனால், நாங்கள் அதை விட மாட்டோம். அனுமதிக்க மாட்டோம். ‘கருணாநிதி இருக்கும் இடத்தில் மதவாதம் நுழையாது’ என்றார், சி.சுப்பிரமணியம். அவர் கூறியதைப் போல சாகும் வரையில் கருணாநிதி இந்தச் சொல்லைக் காப்பாற்றுவான்’’ என்று அனல்பறக்கப் பேசினார். அதை தன் வாழ்நாளில் செய்தும் காட்டினார், கலைஞர்.

...நீளும்

## ஏ.ஐ.யில் பெரியாரின் வரலாறு!

புரட்சியாளர் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸோடு அமர்ந்து பேசுவது போலவும், மடிக்கணினி பயன்படுத்துவது போலவும், அம்பேத்கரை அமர வைத்து, பெரியார் புல்லட் ஓட்டிச் செல்வது போலவும், பள்ளிச் சிறுமியை அழைத்துச் செல்வதுபோலவும், பட்டம் வாங்கிய இளம்பெண்கள் பெரியாரைத் தூக்கிச் சுமந்து கொண்டாடுவது போலவும் என விதவிதமான பெரியார் படங்கள், மிக தத்ரூபமாக செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் (ஏ.ஐ.) உருவாக்கப்பட்டு, கடந்த மே மாதத்தில் இணையத்தை ஆக்கிரமித்தன.

தற்போது, அவற்றின் அப்டேட் வெர்சனாக, முழுக்க முழுக்க ஏ.ஐ.-யால் உருவாக்கப்பட்ட, தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறு குறித்த காணொலி ‘The AI Dravidian’ யூடியூப் சேனலில் ‘தந்தை பெரியார்: வாய்ஸ் ஆஃப் ரேசனலிஸம்’ என்ற தலைப்பில், வெளியாகியிருக்கிறது. விக்னேஷ் கிருஷ்ணன் என்பவர் உருவாக்கியுள்ள இந்த காணொலியின் முதல் அத்தியாயத்தில், பெரியாரின் பிறப்பு, சீர்திருத்தக்காரர் ஆனது எப்படி, ஆகிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. 10.49 நிமிடங்கள் கொண்ட இந்த முதல் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள விறுவிறுப்பான ஏ.ஐ. காட்சிகள், தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தையும் வெளிப்படுத்தி வியப்படையச் செய்கின்றன.

மார்பிங் செய்வது, முகத்தை மாற்றி இழிவுபடுத்துவது என ஏ.ஐ. தொழில்நுட்பத்தை மோசமாக பயன்படுத்துவோருக்கு மத்தியில், ஒரு சித்தாந்தத்தைப் போதித்து, தமிழ்நாட்டின் திசைவழியைக் கட்டமைத்த தன்னிகரற்ற தலைவரின் வரலாற்றைச் சொல்வதற்கு ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தியிருக்கிறார் விக்னேஷ் கிருஷ்ணன். காணொலி வெளியிடப்பட்ட முதல் நாளிலேயே பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்த்து ரசித்து, சமூக வலைதளங்களிலும் பலர் பதிவிட்டுள்ளனர். நவீன விரும்பியான பெரியாரை நவீனப்படுத்துவதில் புதுமையான முயற்சி இது.

காணொலியைக் காண ஸ்கேன் செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர்கள் முன் நேர்காணல்!



எஸ்.கண்மணி

அப்பா திருப்பத்தூர் கோ.சண்முகம் கழக முன்னோடி. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். நான், 2002-ஆம் ஆண்டு முதல் நகரத் துணைச் செயலாளர், 14 ஆண்டுகளாக மாநில பொதுக்குழு உறுப்பினர், தற்போது திருப்பத்தூர் மாவட்ட மகளிர் தொண்டரணித் தலைவராக இருக்கிறேன். இந்தப் படம் 2014-ஆம் ஆண்டு கழக வேட்பாளர் நேர்காணலின்போது எடுத்தது. தலைவர்கள் முன் அமர்ந்து பதில் கூறியது மறக்க முடியாத ஓர் அனுபவம்

**– எஸ்.கண்மணி, மாவட்ட மகளிர் தொண்டரணித் தலைவர், திருப்பத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### போர் நிதிக்கூட்டம்

02.12.1962-இல் சென்னையில் தி.மு.க. சார்பில் சீனப் போர் நிதிக் கூட்டம் எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணாவிடம் பொதுமக்கள் வரிசையில் நின்று நிதி கொடுத்தனர். 35 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக திரட்டப்பட்டது. பெண்கள் பலர் வளையல், தோடு, மோதிரம் போன்ற தங்க நகைகளையும் வாரிக் கொடுத்தனர். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரான நாவலர் நெடுஞ்செழியனும், கழகப் பொருளாளர் கலைஞரும் சென்று அன்றைய முதல்வர் காமராசரிடம் ஒப்படைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131